ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2168/8 - 2020 මාර්තු මස 26 වැනි බ්‍රහස්පතින්දා - 2020.03.26

*2168/8 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 26 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

(முத்திரை)

கோட்டாபய ராஜபக்ஷ.

### சனாதிபதியின் பணிப்புரை

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 33 ஆம் உறுப்புரையினால் அதிமேதகு சனாதிபதி அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் வண்ணம் கொரோனா வைரஸை இலங்கையிலிருந்து ஒழித்துக்கட்டும்போது அதிக நெருக்கடியான நிலையில் உள்ள கொழும்பு, களுத்துறை, கம்பஹா, புத்தளம், யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, வவுனியா மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கி அப்பிரதேசங்களுக்கு கிராமியப் பிரதேச மற்றும் உற்பத்தியாளர்களால் வழங்கப்படும் உணவு விநியோகம் உடனடியாக நுகர்வோருக்குப் பெற்றுக்கொடுத்தல் உள்ளிட்ட ஒட்டுமொத்த மக்களும் வாழ்க்கையை உரியவாறு நடாத்திச் செல்வதற்குத் தேவையான சேவைகளைத் தொடர்ந்து வழங்குவதை வழிநடத்துதல், கூட்டிணைத்தல் மற்றும் தொடராய்வு செய்வதற்காக சனாதிபதி செயலணியொன்றை நிறுவுதல்.

1. திரு. பசில் ராஜபக்ஷ
   சனாதிபதியின் விசேட பிரதிநிதி
2. திரு. ரொஷான் மகேஷ் ஜேம்ஸ் குணதிலக்க
   கௌரவ ஆளுநர், மேல் மாகாணம்
3. திரு. ஏ. ஜே. எம். முசம்மில்
   கௌரவ ஆளுநர், வடமேல் மாகாணம்

1A - G 32209 — 32 (2020/03)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

4. திருமதி. பி. எஸ். எம். சார்ள்ஸ்
கௌரவ ஆளுநர், வட மாகாணம்
5. திரு. காமினி சேதர செனரத்
பிரதமரின் செயலாளர்
6. திரு. எஸ். ஆர். ஆட்டிகல
செயலாளர், நிதி, பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு
7. திருமதி. வசந்தா பெரேரா
செயலாளர், மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு
8. திரு. எஸ். ஹெட்டிஆரச்சி
செயலாளர், பொதுநிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
9. திரு. எச். கே. டி. டப்ளிவ். எம். என். பீ. ஹபுஹின்ன
செயலாளர், மகாவலி, கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு
10. பேராசிரியர் பிரியத் பந்து விக்கிரம அவர்கள்
செயலாளர், நகர அபிவிருத்தி, நீர்வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சு
11. மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) கமல் குணரத்ன அவர்கள்
செயலாளர், பாதுகாப்பு அமைச்சு
12. திரு. ஜி. கே. எஸ். எல். ராஜதாச
செயலாளர், உள்ளக வர்த்தக, உணவுப் பாதுகாப்பு மற்றும் பாவனையாளர் நலனோம்புகை அமைச்சு
13. லுதினன் ஜெனரல் சவேந்திர த சில்வா அவர்கள்
பாதுகாப்பு பதவிநிலை பிரதானி /தரைப்படை
14. வைஸ் அத்மிரால் பியல் த சில்வா அவர்கள்
கடற்படைத் தலைவர்
15. திரு. டி. சி. விக்கிரமரத்ன
பதில் பொலிஸ் மா அதிபர்
16. ரியல் அத்மிரல் (ஓய்வுபெற்ற) ஆனந்த பீரிஸ் அவர்கள்
பணிப்பாளர் நாயகம், சிவில் பாதுகாப்புப் படை
17. திருமதி. ஜே. எம். சி. ஜயந்தி விஜேசூரிய
பிரதம செயலாளர், மேல் மாகாணம்
18. திரு. பி. பீ. எம். சிறிசேன
பிரதம செயலாளர், வடமேல் மாகாணம்
19. திரு. ஏ. பத்திநாதன்
பிரதம செயலாளர், வட மாகாணம்
20. மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) சாந்த திசாநாயக்க
தலைவர், நுகர்வோர் அலுவல்கள் பற்றிய அதிகாரசபை
21. திரு. மஹேஷ் கம்மம்பில
பணிப்பாளர், உரச் செயலகம்
22. திரு. ஜே. ஏ. நுஷாட் எம் பெரேரா
தலைவர், கூட்டுறவு மொத்த விற்பனைக் கூட்டுத்தாபனம்
23. திரு. பந்துல திலகசிறி
பணிப்பாளர் நாயகம், சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம்
24. திரு. பொனிபஸ் சில்வா
முகாமையாளர், மக்கள் வங்கி
25. திரு. சுதத் குணசேக்கர
முகாமையாளர், இலங்கை வங்கி
26. பொறியியலாளர் விஜித ஹேரத் அவர்கள்
தலைவர், இலங்கை மின்சார சபை
27. திரு. டப்ளிவ். டப்ளிவ். டி. சுமித் விஜேசிங்க
தலைவர், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
28. திரு. ஏ. விமலவீர
தொழில் ஆணையாளர் நாயகம்
29. திரு. எஸ். சிங்கப்புலி
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்

30. மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) ஜி. விஜித ரவிபிரிய அவர்கள்
பணிப்பாளர் நாயகம், இலங்கைச் சுங்கம்
31. திரு. பிரதீப் யசரத்ன
மாவட்டச் செயலாளர், கொழும்பு
32. திரு. சுனில் ஜயலத்
மாவட்டச் செயலாளர், கம்பஹா
33. திரு. கே. மகேசன்
மாவட்டச் செயலாளர், யாழ்ப்பாணம்
34. திரு. யு. டி. சி. ஜயலால்
மாவட்டச் செயலாளர், களுத்தறை
35. திரு. எல். ஜே. எம். ஜி. சி. பண்டார
மாவட்டச் செயலாளர், புத்தளம்
36. திரு. என். டப்ளிவ். ஜி. ஆர். டி. நாணாயக்கார
உதவி மத்திய வங்கி ஆளுநர்
37. திரு. ரி. எம். ஜே. பி. பெர்ணாந்து
உதவி மத்திய வங்கி ஆளுநர்
38. மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) சுதந்த ரணசிங்க அவர்கள்
பணிப்பாளர் நாயகம், அனர்த்த முகாமைத்துவ நிலையம்
39. திரு. எஸ். பீ. திவாரத்ன
இணைத் தலைவர், வறுமையை ஒழித்தல் மற்றும் வாழ்வாதார அபிவிருத்திக்கான செயலணி
40. மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) சுமேத பெரேரா வறுமையை ஒழித்தல் மற்றும் வாழ்வாதார அபிவிருத்திக்கான செயலணி

ஆகியோருக்கு,

வாழ்த்துக்கள்!

இலங்கையில் தற்போது கொரோனா நோயாளிகளைப்போன்று நோய் தொற்றுக்கு ஆளாகியிருப்பதாகக் கருதப்படும் நபர்களின் எண்ணிக்கை எல்லா நாடுகளிலும் அதிகரித்து வருவதாக உலக சுகாதார அமைப்பினால் எனக்கு வாரந்தோறும் காட்டியுள்ளதைக் கவனத்தில் கொண்டும்,

மேற்போந்த நிலைமையைக் கட்டுப்படுத்தி இதைத் தொற்றும் நிலைமை வரை உயர்வடையாது தடுப்பதற்காக இலங்கையிலிருந்து கொரோனா நோயை ஒழிக்கும் நோக்கில் எடுக்கவேண்டிய சகல செயற்பாடுகளை எடுப்பது அரசின் பொறுப்பாகும் என்பதனாலும்,

மேற்போந்த நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்காக சுகாதாரம், பாதுகாப்பு, உணவு விநியோகம் உள்ளிட்ட ஏனைய அரசாங்க மற்றும் சகல தனியார் துறைகளும் ஒன்றிணைந்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்காக அரசாங்கத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளதாதலாலும்,

அதேபோன்று, மேலும் பொதுமக்கள் தமது வாழ்க்கையை உரியவாறு நடத்திச் செல்வதற்குப் பாதிப்பு ஏற்படாதவாறு மக்களுக்கான சகல சேவைகளையும் தொடர்ந்து வழங்குவதற்காக அரசும், சகல தனியார் துறைகளும், அரசாங்க தலையீட்டினூடாக உரிய திறமுறைகளின்கீழ் முகாமைத்துவம் செய்யும் தேவைப்பாடு எழுந்துள்ளதாதலாலும்,

வெளிநாட்டு வழங்கல்கள் இடைநிறுத்தப்படும் நிலைமையினுள் உள்நாட்டு உணவு உற்பத்தியின் தேவைப்பாடு அதிக அளவில் ஏற்படுமென்பதாலும், உணவுப் பாதுகாப்பு மிகவும் முதன்மையான பணியாகும் என்பதனாலும்,

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி பதவியை வகிக்கும் கோட்டாபய ராஜபக்ஷ ஆகிய நான், தங்களின் விவேகம், திறமை மற்றும் பற்றுறுதி என்பவற்றின்மீது மிகுந்த நம்பிக்கை வைத்து, மேற்குறிப்பிட்ட தங்களை அதாவது,

1. திரு. பசில் ராஜபக்ஷ
சனாதிபதியின் விசேட பிரதிநிதி
2. திரு. ரொஷான் மகேஷ் ஜேம்ஸ் குணதிலக்க
கௌரவ ஆளுநர், மேல் மாகாணம்
3. திரு. ஏ. ஜே. எம். முசம்மில்
கௌரவ ஆளுநர், வடமேல் மாகாணம்

4. திருமதி. பி. எஸ். எம். சார்ள்ஸ்
கௌரவ ஆளுநர், வட மாகாணம்
5. திரு. காமினி சேதர செனரத்
பிரதமரின் செயலாளர்
6. திரு. எஸ். ஆர். ஆட்டிகல
செயலாளர், நிதி, பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு
7. திருமதி. வசந்தா பெரேரா
செயலாளர், மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு
8. திரு. எஸ். ஹெட்டிஆரச்சி
செயலாளர், பொதுநிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
9. திரு. எச். கே. டி. டப்ளிவ். எம். என். பீ. ஹபுஹின்ன
செயலாளர், மகாவலி, கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு
10. பேராசிரியர் பிரியத் பந்து விக்கிரம அவர்கள்
செயலாளர், நகர அபிவிருத்தி, நீர்வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சு
11. மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) கமல் குணரத்ன அவர்கள்
செயலாளர், பாதுகாப்பு அமைச்சு
12. திரு. ஜி. கே. எஸ். எல். ராஜதாச
செயலாளர், உள்ளக வர்த்தக, உணவுப் பாதுகாப்பு மற்றும் பாவனையாளர் நலனோம்புகை அமைச்சு
13. லுதினன் ஜெனரல் சவேந்திர த சில்வா அவர்கள்
பாதுகாப்பு பதவிநிலை பிரதானி /தரைப்படை
14. வைஸ் அத்மிரல் பியல் த சில்வா அவர்கள்
கடற்படைத் தலைவர்
15. திரு. டி. சி. விக்கிரமரத்ன
பதில் பொலிஸ் மா அதிபர்
16. ரியல் அத்மிரால் (ஓய்வுபெற்ற) ஆனந்த பீரிஸ் அவர்கள்
பணிப்பாளர் நாயகம், சிவில் பாதுகாப்புப் படை
17. திருமதி. ஜே. எம். சி. ஜயந்தி விஜேசூரிய
பிரதம செயலாளர், மேல் மாகாணம்
18. திரு. பி. பீ. எம். சிறிசேன
பிரதம செயலாளர், வடமேல் மாகாணம்
19. திரு. ஏ. பத்திநாதன்
பிரதம செயலாளர், வட மாகாணம்
20. மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) சாந்த திசாநாயக்க
தலைவர், நுகர்வோர் அலுவல்கள் பற்றிய அதிகாரசபை
21. திரு. மஹேஷ் கம்மம்பில
பணிப்பாளர், உரச் செயலகம்
22. திரு. ஜே. ஏ. நுஷாட் எம் பெரேரா
தலைவர், கூட்டுறவு மொத்த விற்பனைக் கூட்டுத்தாபனம்
23. திரு. பந்துல திலகசிறி
பணிப்பாளர் நாயகம், சமூர்த்தி அபிவிருத்தித் திணைக்களம்
24. திரு. பொனிபஸ் சில்வா
முகாமையாளர், மக்கள் வங்கி
25. திரு. சுதத் குணசேகர
முகாமையாளர், இலங்கை வங்கி
26. பொறியியலாளர் விஜித ஹேரத் அவர்கள்
தலைவர், இலங்கை மின்சார சபை
27. திரு. டப்ளிவ். டப்ளிவ். டி. சுமித் விஜேசிங்க
தலைவர், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
28. திரு. ஏ. விமலவீர
தொழில் ஆணையாளர் நாயகம்
29. திரு. எஸ். சிங்கப்புலி
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்

30. மேஜர் ஜெனரால் (ஓய்வுபெற்ற) ஜி. விஜித ரவிபிரிய அவர்கள்
பணிப்பாளர் நாயகம், இலங்கைச் சுங்கம்
31. திரு. பிரதீப் யசரத்ன
மாவட்டச் செயலாளர், கொழும்பு
32. திரு. சுனில் ஜயலத்
மாவட்டச் செயலாளர், கம்பஹா
33. திரு. கே. மகேசன்
மாவட்டச் செயலாளர், யாழ்ப்பாணம்
34. திரு. யு. டி. சி. ஜயலால்
மாவட்டச் செயலாளர், களுத்தறை
35. திரு. எல். ஜே. எம். ஜி. சி. பண்டார
மாவட்டச் செயலாளர், புத்தளம்
36. திரு. என். டப்ளிவ். ஜி. ஆர். டி. நாணாயக்கார
உதவி மத்திய வங்கி ஆளுநர்
37. திரு. ரி. எம். ஜே. பி. பெர்ணாந்து
உதவி மத்திய வங்கி ஆளுநர்
38. மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) சுதந்த ரணசிங்க அவர்கள்
பணிப்பாளர் நாயகம், அனர்த்த முகாமைத்துவ நிலையம்
39. திரு. எஸ். பீ. திவாரத்ன
இணைத் தலைவர், வறுமையை ஒழித்தல் மற்றும் வாழ்வாதார அபிவிருத்திக்கான செயலணி
40. மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) சுமேத பெரேரா வறுமையை ஒழித்தல் மற்றும் வாழ்வாதார அபிவிருத்திக்கான செயலணி

கொரோனா வைரஸை இலங்கையிலிருந்து ஒழித்துக்கட்டும்போது அதிக நெருக்கடியான நிலையில் உள்ள கொழும்பு, களுத்துறை, கம்பஹா, புத்தளம், யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, வவுனியா மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கி அப்பிரதேசங்களுக்கு கிராமியப் பிரதேச மற்றும் உற்பத்தியாளர்களால் வழங்கப்படும் உணவு விநியோகம் உடனடியாக நுகர்வோருக்குப் பெற்றுக்கொடுத்தல் உள்ளிட்ட ஒட்டுமொத்த மக்களும் வாழ்க்கையை உரியவாறு நடாத்திச் செல்வதற்குத் தேவையான சேவைகளைத் தொடர்ந்து வழங்குவதை வழிநடத்துதல், கூட்டிணைத்தல் மற்றும் தொடராய்வு செய்வதற்காக சனாதிபதி செயலணியின் உறுப்பினர்களாக இத்தால் நியமிப்பதுடன் பின்வரும் பணிகளை நிறைவேற்றுவதற்காக எனது ஆணையாளர்களாக இத்தால் நியமிக்கின்றேன்.

1. நெல், தானியங்கள், மரக்கறி, பழவகைகள், மீன், இறைச்சி, பால் மற்றும் முட்டைகளை உற்பத்தி செய்யும் பண்ணைகள் மற்றும், தேயிலை, கறுவா, மிளகு ஆகிய பெருந்தோட்ட உற்பத்தி நடவடிக்கைகளுக்காக கமக்காரர்களுக்குத் தேவையான வசதிகளை வழங்குதல்,

2. கமத்தொழில் சார்ந்த உற்பத்திகளைப் பாவனையாளர்களுக்கு உடனடியாகப் பெற்றுக் கொடுப்பதற்காக சகல பொருளாதார மத்திய நிலையங்கள், லங்கா ச. தொ. ச, கூட்டுறவு வர்த்தக வலையமைப்பு, கார்கில்ஸ், கீல்ஸ், ஆர்பிகோ, லாவ் வர்த்தக வலையமைப்பு என்பவற்றை ஏற்படுத்துதல் மற்றும் வழிநடத்துதல்,

3. பொருளாதார மத்திய நிலையங்களுக்குக் கிடைக்கும் கமத்தொழில் உற்பத்திகளை அதே பிரதேசங்களில் உள்ள பாவனையாளர்கள் போன்று நகர் பிரதேசங்களில் உள்ள பாவனையாளர்களுக்கும் சமமாகப் பெற்றுக் கொள்வதற்காக விநியோக நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்துதல்,

4. அவசியமான உலர் உணவுகளை இறக்குமதி செய்வதை இலகுபடுத்துவதற்காக இலங்கைத் துறைமுகம், இலங்கைச் சுங்கம், Corporate Banking மற்றும் ஏனைய அரச ஒழுங்குறுத்துகை நிறுவனங்களின் கூட்டிணைப்பு மற்றும் முக்கிய தீர்மானங்களைச் செயற்படுத்துதல்,

5. அரிசி, தேங்காய், தேயிலை, மாமிச உணவுகள், உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் துப்புரவேற்பாட்டுப் பொருட்கள் மற்றும் உணவு என்பவற்றைக் கொண்டுசெல்வதற்குத் தேவையான போக்குவரத்துக்காக எரிபொருள், பாதுகாப்புச் சேவைகள், வங்கி வசதிகளைப் பெற்றுக்கொடுத்தல்,

6. அத்தியாவசிய சேவைகள், பொருட்கள் மற்றும் பொருட்களைப் பாவனையாளர்களுக்கு வழங்கும் லொறி, முச்சக்கரவண்டிகள், பேரூந்துகள், மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்கள் மற்றும் உதவியாளர்களுக்கு சுகாதார மற்றும் துப்புரவேற்பாட்டு

நடவடிக்கைகளுக்கான வசதிகளை வழங்குதல் மற்றும் தேவையான எரிபொருட்களைப் பெறுவதற்குப் பொலிஸ் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும் காலத்தினுள் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தெரிவுசெய்யப்பட்ட எரிபொருள் நிரப்பும் நிலையங்களை திறந்து வைத்தல் மற்றும் தேவையான எரிபொருளை வழங்குதல்,

7. கமத்தொழில் நடவடிக்கைகளுக்காக விதைகள், நாற்றுகள், உரம், உபகரணங்கள் ஆகியவற்றை வழங்குவதற்குக் கமத்தொழில் திணைக்களம், கமநல சேவைகள் திணைக்களம், சமுர்த்தி அதிகாரசபை, கூட்டுறவுக் கமத்தொழில் சங்கங்கள், கமக்காரர் அமைப்புகள், தனியார் விதை உற்பத்தி நிறுவனங்கள் என்பவற்றை வழிநடத்துதல் மற்றும் தேவையான வசதிகளை வழங்குதல்,

8. விதை கமத்தொழில் பண்ணைகளை ஊக்குவித்தலும், சேதனப் பசளைப் பாவிப்பை பிரசித்தப்படுத்தல் மற்றும் வீட்டுத்தோட்ட உற்பத்திகளை ஊக்குவித்தல், முடிந்தளவு சுய நுகர்வு வழங்கலொன்றை வீட்டு மட்டத்தில் ஏற்படுத்துவதற்கு கிராமிய பரந்த சேவைகளில் ஈடுபடும் உத்தியோகத்தர்களை வழிநடத்துதல்,

9. இலங்கை வங்கி, மக்கள் வங்கி, பிரதேச அபிவிருத்தி வங்கி, சமுர்த்தி வங்கி கிளைகளின்மூலம் கமக்காரர்களுக்குத் தேவையான நிதிக் கடன் வசதிகளை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் மற்றும் வழிநடத்துதல்.

10. கிராமிய மற்றும் நகரப் பிரதேசங்களில் குப்பைகளை அகற்றுதல், மின்சாரம் மற்றும் நீர் விநியோகம் ஆகிய சேவைகளைத் தொடர்ந்து வழங்குவதற்காக ஏற்ற நடவடிக்கைகளைச் செயற்படுத்துதல்.

11. மேற்போந்த வசதிகளை வழங்கும்போது, மகளிர், குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள் மற்றும் உடனடிக் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய நபர்களுக்காக விசேட கவனத்தைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

12. சகல வங்கிக் கிளைகளிலும் கொடுக்கல்வாங்கல் செய்வோரின் தேவைகளைப் பூர்த்திசெய்துகொள்ளக்கூடிய வகையில் அத்தியாவசிய வங்கிச் சேவைகளை மேற்கொள்ளுவதற்காக நாளொன்றுக்குக் குறைந்தபட்சம் 04 மணித்தியாலங்கள் 04 உத்தியோகத்தர்களுடன் திறந்துவைத்தல்.

மேலும், சனாதிபதியின் விசேட பிரதிநிதி, பசில் ராஜபக்ஷ அவர்களை செயலணியின் தலைவராகவும்,

பிரதம அமைச்சர் அலுவலகத்தின் மேலதிகச் செயலாளர் அன்ரன் பெரேரா அவர்களை செயலணியின் செயலாளராகவும் நியமிக்கின்றேன்.

மேலும், இத்தால் கையளிக்கப்படும் பணிகளை நிறைவேற்றுவதற்கு உரியதாகத் தேவைப்படக்கூடிய விடயங்களை தேடிப்பார்ப்பதற்கும் ஆலோசனை வழங்குவதற்கும் கொரோனா வைரஸை இலங்கையிலிருந்து ஒழித்துக்கட்டும்போது அதிக நெருக்கடியான நிலையில் உள்ள கொழும்பு, களுத்துறை, கம்பஹா, புத்தளம், யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, வவுனியா மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கி அப்பிரதேசங்களுக்கு கிராமியப் பிரதேச மற்றும் உற்பத்தியாளர்களால் வழங்கப்படும் உணவு விநியோகம் உடனடியாக நுகர்வோருக்குப் பெற்றுக்கொடுத்தல் உள்ளிட்ட ஒட்டுமொத்த மக்களும் வாழ்க்கையை உரியவாறு நடாத்திச் செல்வதற்குத் தேவையான சேவைகளைத் தொடர்ந்து வழங்குவதை வழிநடத்துதல், கூட்டிணைத்தல் மற்றும் தொடராய்வு செய்வதற்காக செயலணிக்கு இத்தால் அதிகாரமளிக்கின்றேன்.

மேலும், கொரோனா வைரஸை இலங்கையிலிருந்து ஒழித்துக்கட்டும்போது அதிக நெருக்கடியான நிலையில் உள்ள கொழும்பு, களுத்துறை, கம்பஹா, புத்தளம், யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, வவுனியா மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கி அப்பிரதேசங்களுக்கு கிராமியப் பிரதேச மற்றும் உற்பத்தியாளர்களால் வழங்கப்படும் உணவு விநியோகம் உடனடியாக நுகர்வோருக்குப் பெற்றுக்கொடுத்தல் உள்ளிட்ட ஒட்டுமொத்த மக்களும் வாழ்க்கையை உரியவாறு நடாத்திச் செல்வதற்குத் தேவையான சேவைகளைத் தொடர்ந்து வழங்குவதை வழிநடத்துதல், கூட்டிணைத்தல் மற்றும் தொடராய்வு செய்வதற்காக செயலணியின் உறுப்பினர்களுக்கான உங்களுக்கு காலத்துக்குக்காலம் எனக்கு அறிக்கை சமர்ப்பிப்பதற்கு இத்தால் அதிகாரமளிக்கின்றேன்.

மேலும், கொரோனா வைரஸை இலங்கையிலிருந்து ஒழித்துக்கட்டும்போது அதிக நெருக்கடியான நிலையில் உள்ள கொழும்பு, களுத்துறை, கம்பஹா, புத்தளம், யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, வவுனியா மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கி அப்பிரதேசங்களுக்கு கிராமியப் பிரதேச மற்றும் உற்பத்தியாளர்களால் வழங்கப்படும் உணவு விநியோகம் உடனடியாக நுகர்வோருக்குப் பெற்றுக்கொடுத்தல் உள்ளிட்ட ஒட்டுமொத்த மக்களும் வாழ்க்கையை உரியவாறு நடாத்திச் செல்வதற்குத் தேவையான சேவைகளைத் தொடர்ந்து வழங்குவதை வழிநடத்துதல், கூட்டிணைத்தல் மற்றும் தொடராய்வு செய்வதற்கான செயலணியினால் ஆலோசனைகள் வழங்கக்கூடிய அல்லது சேவைகளை வழங்குவதற்காக ஒத்துழைப்பினைக் கோரக்கூடிய சகல அரச உத்தியோகத்தர்கள் மற்றும் அத்தகைய ஏனைய நபர்களினால் அப்பணி தொடர்பாக உரியவாறு பின்பற்றக்கூடிய அத்தகைய

ஆலோசனைகளுக்கமையச் செயற்பட வேண்டுமெனவும் வழங்கக்கூடிய சகல உதவிகளையும் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமெனவும் சகல தகவல்களையும் வழங்க வேண்டுமெனவும் நான் இத்தால் சகல அரசாங்க உத்தியோகத்தர்களுக்கும் ஏனைய நபர்களுக்கும் கட்டளையிட்டுப் பணிப்புரை விடுக்கின்றேன்.

மேலும், யாதேனும் அரசாங்க ஊழியர் அல்லது யாதேனும் அமைச்சின், அரச திணைக்களமொன்றின், அரசாங்க கூட்டுத்தாபன மொன்றின் அல்லது ஏனைய அவ்வாறான நிறுவனமொன்றின் உத்தியோகத்தர் ஒருவர் மேற்குறிப்பிட்ட செயலணியினால் ஒப்படைக்கப்படும் கடமைகள் மற்றும் பொறுப்புக்களை நிறைவேற்ற தாமதிக்கும் அல்லது தவறும் சந்தர்ப்பங்கள் எல்லாவற்றையும் என்னிடம் அறிக்கையிடுமாறு மேற்குறிப்பிட்ட செயலணிக்கு நான் இத்தால் கட்டளையிட்டுப் பணிப்புரை விடுக்கின்றேன்.

இரண்டாயிரத்து இருபதாம் ஆண்டு மாச்சு மாதம் 23 ஆந் திகதியாகிய இன்று இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பகிரங்க இலச்சினையின் கீழ் கொழும்பில் வழங்கப்பட்டது.

அதியுத்தமனாரின் ஆணைப்படி

**பீ. பி. ஜயசுந்தர,**
சனாதிபதியின் செயலாளர்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.